அல்லது காக்கி உடைகளை மற்றவர்கள் அணியக்கூடாது என்று கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காவல் துறையினரின் உடையின் நிறத்தை யாரும் தேர்ந்தெடுக்கக்கூடாது என்ற தடையைப் போடுவது இயலாத காரியம். காவல் துறையினர் அணிகின்ற உடையும் மற்றவர்கள் அணிகின்ற உடையும் வெவ்வேறு. நிறம் ஒன்ருக இருக்கலாம், ஆனல் உடையமைப்பு வேறு.

திரு. எம். முத்தையா: போலீஸாருக்கு குல்லாய்கள் செய்யக்கூடிய துணிகள் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. கால்சட்டை மேல்சட்டை இவற்றை தைத்துக் கொடுக்கிருர்கள். ஒவ்வொருவருக்கு அந்த உடை பொருந்தவில்லை. அவர்கள் அதைப் பிரித்து இரண்டாவது முறையாக தைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே தைக்காமலே துணியாகக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூடுமானவரையிலும் உடலளவுக்கு ஏற்ற உடைகள்தான் தரப்படுகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகள் ஏதாவது இருந்தால் உடனடியாக அவை கவனிக்கப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல நெருக்கடியான கட்டங்களில் போலி உடைகள் போலீஸ் உடைகள் கிடைக்கின்றன, அவற்றை வாங்கி அணிந்துகொண்டு மிரட்டுகிருர்கள். எனவே போலீஸ் உடை, தொப்பி இவை வேறு யாருக்கும் கிடைக்காமல் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போலி உடைகளை கடைகளில் வைத்திருக்கமாட்டார்கள். வேடமிட்டு வரவேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் அவர்களே தயாரித்துக் கொள்வார்கள்.

Ground water resources in Dharmapuri District

* 186 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any detailed survey has been made in Dharmapuri district to find out the availability of ground water resources; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை:

Land Development Bank for Kelamangalam Block

* 187 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) Whether there is any proposal to start a Land Development Bank at Kelamangaam Block in Denkanikota Taluk; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) நாள் குறிப்பிடப்படவில்லை.